Daily Thanthi Puducherry 29-9-2024



### ஜிப்மர் மருத்துவமனை சார்பில்

# வயிறு, குடல் மருத்துவ சிகிச்சை முகாம்

காரைக்கால் செப். 29-

காரைக்கால் அரசு ஆஸ்பத்திரியில், புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் இருந்து ஒவ்வொரு மாதமும் 2 சனிக்கிழமைகளில் சிறப்பு மருத்துவர்கள் குழு வருகை புரிந்து மருத்துவ ஆலோசனை மற்றும் சிகிச்சை முகாம் நடத்தி வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, நேற்று காலை 10 மணி முதல் பகல் 12 மணி வரை வயிறு, குடல் சம்பந்தமான சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகள் முகாம் நடைபெற்றன. இதில் ஜிப்மர் டாக்டர் குழுவினர் பங்கேற்று காரைக்கால் வாழ் பொதுமக்களுக்கு ஆலோசனைகள் வழங்கினர். இதில் 100-க்கும் மேற்பட்டவர்கள் பயன் அடைந்தனர்.